உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

ஆண்டு ௧	யுவ ஐப்பசி—1935—அக்டோபர்	திங்கள் ௫.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

தெய்வமே துணை.

உலகில் வாழும் உயிரினங்கட் கெல்லாம் துணைபுரிபவர் உயிர்க்குயிராய் விளங்கும் ஒரு பெருங் கடவுளேயாவர். ஆகலின், பகுத்தறிவோடுகூடிய மக்கள்யாக்கையைப்பெற்ற ஒவ்வொருவரும் தெய்வ நம்பிக்கையுடையராய் தெய்வ சிந்தனையுடன் தெய்வ வழிபாடு செய்து தெய்வம் போற்றுதல் கடனாம். தெய்வத்தைக் கண்டதார்? கண்டதாகச் சொல்லக் கேட்டதார்? நேர்முகமாக பெண்டீர் மக்கள் கிளைஞராதியரே உறுதுணையாகக் காணப்படுகின்றனர்; அவர்களே பின்னுக்குதவியாவர் என்றெண்ணித் தருமமார்க்கத்தைக் கைவிட்டுக் கடன்பட்டுச் சாவார், நரகிடைவீழ்ந்து துயருழக்குங்கால் ஐயோ! என்னோடு உண்டுடுத்தி வாழ்ந்த உறவினர்களே ஆபத்துற்ற இந்தச் சமயத்தில் ஒருவராவது வந்து அணுகித் துணைபுரியவில்லையே உங்களை நம்பியதனால் உண்டான பலன் இவ்வளவுதானா என்று வருந்தநேரும்.

உருவு பெற்றுவிளங்கும் மனிதர்களை; மனைவி, மக்கள், சுற்றம் என்பாரைத் துணையாக நம்பி வாழலாமென்பது ஏமாற்றமாக முடிகிறதை அநுபவத்தாலும் அறிகிறோம். ஆருயிர்க் காதலரெனக் கூடி வாழும் கணவனும் மனைவியும் உற்ற சமயத்தில் ஒருவர்க்கொருவர் உதவுவதில்லை; மற்றவை யெல்லாம் நடிப்புமாத்திரமே. மக்களோ வாரிச்சுருட்டி மடக்கிக்கொள்ள முழுப்பாத்தியம் கொண்டாடுபவர்களன்றி தேடிக் கொண்டுவந்து பெற்றோரைப் பேணுங்

கருத்துடையராயில்லை. சுற்றத்தினரோ தங்கள்பொருளைத் தந்தாவது மனமொழி மெய்களாலாவது சகாயஞ்செய்யாவிட்டாலும் அவர்களை நம்பி நம் தேவைக்காகுமென்று கொடுத்துவைத்தவைகளை எடுத்துக் கொள்ளாமல் தந்தால் போதுமென்று கருதநேருகிறது. என்னிடம் கொடுத்ததாக ஆதாரவுண்டா? காட்டட்டும்; அப்படி யிருந்தாலும் அவ்வப்போது கொடுத்துத் தீர்ந்திருக்கும்; வட்டி, வட்டிக்குவட்டி எதுவும் பேசிக் கொள்ளவில்லை; காலாவதியாய்விட்டது. என்றெல்லாம் சொல்லி நல்லபுள்ளிகளாக மதித்து நம்பிவைத்ததற்கு மாறாக முழுமோசக்காரராய் விடுகிறார்கள். மீளாநரகிற் காளாகும் இவர்களைத் தான் "நட்பிடைவஞ்சஞ் செய்தும் நம்பினோர்க்கூன்மாறாட்டத்தட் படக் கவர்ந்தும் ஏற்றோர்க்கிம்மியும் உதவாராயும்" என பரஞ்சோதியார் சிவவாக்காக அருளிப் போந்தார்.

ஆகவே, நாளைக்கிருப்ப ரென்று நம்பத்தகாதவர்களை நயவஞ்சகர்களைப் பிறர் பொருள்விளையும் பேயர்களைத் துணையென நம்பி அவமாகிய துன்பத்திற்காளாகாமல் "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்னும் உறுதிகைக்கொண்டு எந்நாளும் இறைவனையே துணைக்கோடல் வேண்டும்.

ஆனதுபற்றி யன்றோ முற்றத் துறந்த பட்டினத்தடிகள் "யாவரே யிருந்தும் யாவரே வாழ்ந்தும் யாவரே யெமக்குறவாயும் தேவரீரல்லால் திருவுளமறியத் திசைமுகம் எனக்கு வேறுளதோ" எனவும், வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற நம்தாயுமானார் "ஆரிருந்தென் ஆர்போயென் ஆமுதாம் நின்னருளின் சீரிருந்தா லுய்வேன் சிவமே பராபரமே" எனவும் அருளிப் போந்தனர்.

"நிம்ப நிழற்களி றம்பொன் மலர்த்தாள் நம்புதுமுத்தி நலின் பம் வரற்கே" என்றார் பெரியார். வேப்பமரத்தின் நிழலில் திருவுருக்கொண்டு விளங்கும் யானைமாமுகக் கடவுளின் பொன்னிறத்த தாமரைமலர்போலும் திருத்தாள்களைத் துணைக்கொள்க முத்தியாகிய நல்லின்பம் வருதற்கு என்பது பொருள். முத்தி என்பது இன்பவீடடைதல். துன்பகன்றவிடத்தே இன்பவீடுறலாம். இன்பவுருவினராக விளங்கும் இறைவனைத் துணைப்பற்றி நின்றால்தான் இன்பமாயதருகிடை யோங்கும்; துன்பமாயது தூரத்து ணீங்கும்.

இவ்வுண்மையை யுணர்ந்தே அறிவுடைப் பெரியோரனைவரும் நினைவிலும் மொழியிலும் எழுத்திலும் தெய்வமே துணை எனக் கொள்கின்றனர். அவர்கட்குத் தெய்வந்துணை புரிகின்றது. இதனை, தாயத்தார்கள் வம்பு வழக்குப் பேசிக் கொள்ளைகொண்ட பொருளைத் திரும்பவாங்கிக் கொடுக்க இறைவரே மாமனாகவந்து வழக்குரைத்த திருவிளையாடலாதிய பல சான்றுகளால் அறியலாம். 'ஆருமில்லார்க்குத் தெய்வம் துணையென்பதறிந்தேன்' என்று அத் திருவிளையாடற்செய்யுள் வலியுறுத்துகின்றது.

'குற்றாலத்துறை கூத்தனல்லால்நமக் குற்றாராருளரோ' என திருநாவுக்கரசு சுவாமிகளும்.

'பழுதில் தொல்புகழாள் பங்கநீ யல்லாற் பற்றுநான் மற்றிலேன் கண்டாய் செழுமதி யணிந்தாய் சிவபுரத் தரசே திருப்பெருந் துறையுறை சிவனே தொழுவனோ பிறரைத் துதிப்பனோ வெனக் கோர் துணையென நினைவனோ சொல்லாய் மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய் வருகவென் றருள்புரி யாயே' என, மணிவாசகரும் அருளியுள்ளார்களாதலால்,

மக்கள் யாவரும் மக்களை மனைவியை ஒக்கலைப் பெருவாழ்வை உடையோமென்று அநித்தியப்பொருள்களை நம்பி அவமே யழிந்து போகாமல் நித்தியப்பொருளாகிய தெய்வவிளக்கந்தரும் கல்வியைக் கசடறக் கற்று தெய்வ உண்மை தெளிந்து 'இகபர மிரண்டினும் உயிரினுக்குயிராகி யெங்கும் நிறைகின்ற' பொருளையே துணையாகக் கொண்டு சீர்பெறவேண்டுதும்.

கந்தபுராணத்தே ஒருபாவின் பொருள்.

(காஞ்சீவரம் திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார்)

"எம்பிரான் நின்னை முக்கண் எந்தையை வணங்க நேரில்
தம்பெரும் வடிவங் காணச் சாருவர் ஒழிந்த காலை
உம்பர்கோன் முதலோர் தத்தம் உருக்கரந்து உழல்வர் வான்மேல்
வெம்பணி சிலைகள் மாறும் வெய்யவர் நிலைமை யேபோல்"

என்பது கந்தபுராணம் அமரர் சிறைபுகு படலம் பாட்டு நூற்று இருபத்தைந்து.

அப்பாட்டினுக்கு "எமதாண்டவரே ஆகாயத்தி லுலாவுகின்ற இராகு கேதுக்களும் தனுசிராசியும் மூலநட்சத்திரமும் மாறி மாறி வருகின்ற சூரியர்களுமாகிய இவர்களது கதியைப்போல இந்திரன் முதலானவர் தேவரீரையும் சிவபிரானையும் வணங்கும்படி வந்தால் தமது பெரிய வடிவத்தை வெளிக் காட்டிக்கொண்டு வருவார்கள். மற்றைப் பொழுதி லெல்லாம் மறைந்திருந்தார்கள்" என்று ஆசிரியர் ம. தி. பானுகவி அவர்கள் ஒரு பொழிப்புரை எழுதினார்கள்.

அப்பொழிப்புரையினைப் பார்த்தோ பாராமலோ (பார்த்திருப்பர் என்றே யான் எண்ணுகின்றேன்.) ஒரு அறிஞர், மதுரையினின்றும் மாதந்தோறும் வெளிவரும் "செந்தமிழ்" என்ற பத்திரிகையில் (24-ந் தொகுதியின் 172-ம் பக்கத்தில்) "ஐயவினா" என்ற தலைக் குறிப்பிட்டு அந்த "எம்பிரான்" என்றபாவில் குறித்துள்ள உவமையினை விளக்கித் தரும்படி வினவி இருந்தார். அச் "செந்தமிழ்"ப் பத்திரிகையிடத்தே தொடர்புற்றிருந்த அறிஞர் ஒருவர், அவ்வினாவின் தாளிலேயே ஒருவிடை எழுதினார். அவ்விடையாவது:—

"பரிதி யிந்து இரண்டு சீறும் பைநாகக் கோளிரண் டோடு
இருசுடர் வளைந்து சூழும் பரிவேடம் நெடுக வீண்டுப்
பெருகிய வான்மீன் வானில் பெருந்தூமம் எதிர்ந்த வில்லுக்
கருதும் இவ்வெல்லாம் பேசில் கரந்துறை கோள்களாமே."

என்ற சூடாமணி நிகண்டின் பன்னிரண்டாவது பல்பெயர்க் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி நூற்றுப் பத்தாவது பாவினையும், "சூரியன் சந்திரன் இராகு கேது பரிவேடம்இரண்டு வான்மீன் தூமகேது வானவில்இரண்டு ஆக கரந்துறை கோள்கள் பத்து" என்ற (ஆசிரியர் நாவலர்தம் அச்சுப் புத்தகத்துள்ளபடி) அதன் உரையினையும் (விடை யென) எழுதியிருந்தனர்.

அவ்விடை "ஐயவினு"வுக்கும், அந்த "எம்பிரான்" என்ற கவிக் கருத்துக்கும், பொருத்தமாக இல்லை. அன்றி, அச்சூடாமணி நிகண்டின் "பரிதி இந்து" என்ற பாவினுக்கும் பொருந்திய உரையாக இல்லை.

கந்த புராணத்தே "எம்பிரான்" என்ற அப்பாவின் பொருள் யாதென யான் ஆய்ந்து கொண்ட என்முடிபினை இவண் எழுதுகின்றேன். அம்முடிபு — எம்பிரான்! உம்பர்கோன் முதலோர் நின்னையும், முக்கண் இறையையும் வணங்க (தங்கட்குக் காலம்) வாய்க்குமாயின், தங்கள் பெருமை பொருந்திய வடிவங்களை (பாவரும்) காணும்படி (நுங்கள் முன் திரண்டு) சேருவர். (நுங்களை வணங்குங்காலம்) அல்லாத காலங்களில் (அவர்கள்) விண்ணிடத்தே தத்தம் உருக்களை மறைத்துக்கொண்டு (மனக்கலக்கமுடையராய்த்) திரிவர். (அவர்கள் மறைந்து திரிந்து வாழும் அவ்வாழ்க்கை காட்டிடத்தே வழிபறித்து உண்டு மறைந்து வாழும்) வெவ்விய வளைந்த வில்லுகளையுடைய (அறநெறியின்) மாறுபட்ட கொடியர்களின் (வேடர்களின்) வாழ்க்கையினைப் போன்றுளது என்பதே.

அப்பாவின்கருத்துரை:—வானிடத்தே தேவர்கள் சிவ சுப்பிரமணியர்களை வணங்குங்காலம் வாய்க்குமாயின் அக்காலத்தேவெளிப்பட்டும் அல்லாக் காலத்தே மறைந்தும் வாழ்கின்றார்கள். அவர்கள் வாழ்க்கை காட்டிடத்தே வேடர்கள் வழிபறிவாய்க்குங் காலத்தே வெளிப்பட்டும் பிறகாலத்தே மறைந்தும் வாழ்தல் போன்றுளது என்பதாம்.

அச்சூடாமணி நிகண்டின் "பரிதிஇந்து" என்றபாவின் உரையிலே "பரிதிஇந்து"என்ற கோள்களைக்கரந்துறை கோள்கள் என்றதும், கரந்துறைகோள்கள் பத்தெனஎண்ணிட்டுத்தொகை கொண்டதும் பிழையுடைச் செயலாம். "பரிதிஇந்து" என்ற இரண்டுமொழிகளும் இராகு கேதுக்களின் பண்பினை (சீறுதல் தொழிலினை) உணர்த்தும் அடைமொழிகள் ஆகும். "பரிதியும் இந்துவும்" நம்மால் என்றுங் காணப்படுதலால் அவை கரந்துறை கோள்கள் இனத்த அல்லவாம்.

———

வில்லிபுத்தூராரும் சிவபெருமானும்.

(அசுகூர், திரு, S. A. முத்தையாத்தேவர் அவர்கள்.)

உலகத்திலே வாழ்ந்துவந்த பெரும்புலவர்களுள் மிகச்சிறப் பெய்தியவர் வில்லிபுத்தூராழ்வார். அவர் தம்மினுமேம்பட்டார் கல்வியில் யாவரேனும் உளரோஎனும் ஐயத்தினின்று தெளிதற்பொருட்டுத் திக்குவிஜயம் செய்துவந்த பெரியாரும் ஆவர். அவர் ஒழுகிவந்த சமயம் வைணவமேயாம். அத்தகையார் பாரதம் பாடியதற்குத்தக்க காரணம்விளங்கவில்லை. கர்னபரம்பரையில் இவரைப்பற்றி இருசரிதங்கள் வழங்குகின்றன.

ஆழ்வாருக்கும் அவரது உடன்பிறந்தோருக்கும் தாயபாகவிவாதம் உண்டாயபோது, அதை ஆட்கொண்டானெனும் கொங்கராயனிடத்துத் தெரிவிக்க, அவன் வில்லிபுத்தூரார் பாரதத்தைப் பாடிமுடித்தால் அதன் பின்னர் அவ்வழக்கைத் தீர்த்துவைப்பதாகக் கூறினான். அதனால் அவரும் அவ்விதிகாசத்தைப் பாடினர் என்பது ஒன்று. திக்குவிஜயம் செய்து வரும்போது அருணகிரி நாதரிடத்தில் தடையுற்றவராகி, அவணிருந்து செல்லுமார்க்கத்தில் அவரது கண்ணின் எதிரில் அருணைகிரிதோன்றிற்று. அப்போது அத்தலம் தமது கண்ணின்முன் தோன்றுதலைத் திரையிட்டு மறைக்கும்படி, தம் திருக்கூட்டத்திற்கு ஆழ்வார் கட்டளையிட்டார். அதுகண்ட அருணகிரிநாதர் ஆழ்வாரைக் கண்ணிழக்கும்படி சபித்தார். இந் நிகழ்ச்சி அருணகிரிநாதரால் உண்டாயிற்று என்று ஆழ்வார் அறிந்தார். ஆழ்வார் அவரை வணங்கிக் குறையிரந்தார். அப்போது சிவபெருமானையன்றித் தலைமைபெற்ற தெய்வம் வேறின்மையை நன்குணர்ந்தார். அந்தோ! பாவம்!! ஆழ்வார் என் செய்குவர்!!! 'கண்ணிற் சிறந்தவுறுப்பில்லை' என்பர் ஆன்றோர். ஆழ்வார் கணணைப் பெறவிரும்பினார். கண்ணுதற் பெருங்கடவுளைத் துதித்தும், அவரது அடியவர்களின் பெருமையைமதித்தும்போற்றியும் நின்றார். அடியவர்க்கு அடியவராகிய அருணைநாதர் ஆழ்வார் கண்ணைப்பெற்றுத் திகழுமாறு அருள்புரிந்தார். இழந்த கண்ணைப்பெறவே, ஆழ்வாருக்குக் கண்ணீந்தருளிய கடவுண்மீது காதல் எழும்பிற்று. எழவே அன்னோரைப் போற்றற்குப் பாரதம்ஏற்றசாதனம் எனக்கொண்டு அதனைப் பாடினர் என்பது மற்றொன்று.

நாராயணர், என்ற தேவர் உலகபாரத்தைத் தீர்த்துத் தமது நாயகியாகிய பூமிதேவிக்குச் சுகத்தை உண்டுபண்ண எண்ணினார். அவர் எண்ணி

யதை முடிக்க, துவாபரயுகத்திறுதியில் நர நாரணராய் உற்பவித்தார். பூமிதேவி முறையிட்டமை சூதுபோர்ச் சருக்கத்திலுள்ள,

"தானவராகி யிம்மைத் தனித்தனியிறந் தோர்யாரு
மானவராகி யிம்மை வந்தனரிம்பர் என்றே
தானவர் பொறை பொறுமற்றராதல மென்னுஞ்செங்கண்
மானவராக வேதமலர் முனிதனக்குச் சொன்னான்"

என்ற செய்யுளான் நன்கு விளங்கும்.

"நரனும் நாரணனும் ஆனோம்"

என்ற முதற்போர்ச் சருக்கத்து 5-ம் செய்யுளானும், அருச்சுனனது தீர்த்த யாத்திரைச் சருக்கத்திலுள்ள, 'நர நாரணர்க்கு நலங்கூர்தரு நண்புபோல் வார்' என்ற பாடலானும் இது விளக்கமாம்.

மேலும் முதற்போர்ச் சருக்கத்து,

"என்னைநீ புகலக்கேண்மோ யெங்குமா யாவுமாகி
மன்னிய பொருளும்யானே மறைக்லொ முடிவும்யானே
யுன்னையான் பிரிவதில்லை ஒருமுறை பிறந்துமேனள்
நன்னிலா வெறிக்கும் பூணாய்நரனும் நாரணனுமானோம்"

என்ற பாடலானும்,

"பின்னொரு பிறப்பின் யாமேஇராமலக்குமப் பேர்பெற்றோம்
இன்னெடும் பிறப்பின்நீயும் யானுமா யீண்டுநின்றோம்"

என்பதாலும் இலக்குமி நாயகராகிய மாதவன் பாரதத்தை நடத்தக்காரண மூர்த்தியா யிருந்தமையும், அருச்சுனனைப் பற்றுக் கோடாகக் கொண்டிருந் தமையும் நன்குவிளங்குதலால், இவர்களன்றி, பாரதம் நடவாமை இவ் வெடுத்துக்காட்டுக்களால் அறியப்படுகின்றது. ஆகையால், 'மன்னு மாதவன் சரிதமும் இடை இடைவழங்கும் என்னு மாசையால் யானுமீதியம் புதற் கிசைந்தேன்' என்ற ஆழ்வாரது திருவாக்கினுட் காணப்பட்ட மாதவன் என்ற தொடர், சிவபெருமானையன்றி மற்றையோரைக்குறித்திடாது என்ப தும் தெளிவாம். சிலர் 'இடை இடை-மாதவன்' என்ற தொடர் இலக்குமி நாயகனைக் குறிப்பதாகப் பொருள்காண்கின்றனர். இலக்குமி பதியாகிய விட்டுணுவே கிருட்டினனாக அவதரித்து, பாரதத்தைநடத்தியது கற்றோரும் மற்றோரும் நன்கறிந்ததேயாம். அத்தகையாரை 'இடைஇடை' என்று கவிகூறி யிருப்பாராஞல் அது மிகையாகுமன்றோ? இத்தொடர்மொழி இலக்குமி நாயகனைக் குறிக்கும் என்பது, ஓர் இல்லத்தின் கிழவனை அவ் வில்லிற்கு வந்த விருந்தினன் என்றுகூறுதலை ஒக்கும். பாரதத்தை நடத்து வித்தவராகிய தலைவரை 'இடை இடை - மாதவன்' என்று கவிஞர்

கூறினர் என்பது எங்ஙனம் பொருந்தும்? இக் கூற்று, சிவபெருமானைக் குறிப்பதாகக் கொள்ளுதலே ஆழ்வார் எண்ணிய எண்ணத்திற்கு மாறாகா தென்பதை அறிக.

அருச்சுனன் தீர்த்தயாத்திரையில் அருணையைக் குறிக்கும்போது,

"பெற்றாள் சகதண்டங்கள் அனைத்து மவைபெற்று
முற்றாமுகிழ் முலையாளொடு முக்கண்ணர் விரும்பும்
பற்றாமென மிக்கோரிகழ் பற்றாறன்றினு முண்மை
கற்றார்தொழும் அருணாசலம் அன்போடுகை தொழுதான்"

எனவும்,

"கருகுங்கரு முகில்மேனியர் கவிஞானியர் கண்ணிற்
பருகுஞ்சுவை யமுதானவர் பாதந்தலை வைத்தான்"

எனவும் வருதலால், அவை சிவபெருமான் மீது ஆழ்வார்க்குள்ள அன்பின் திறத்தை உணர்த்துவதோடு கற்போரது உள்ளத்தையும் பிணிக்கின்றன.

அடிமுடிதேடியவர்கள் விட்டுணுவும் பிரமாவும் என்பது உலகு அறிந்ததேயாம். அடிமுடிதேடிய தன்மையைத் தீர்த்தயாத்திரைச் சருக்கத்தில், மிக்க உள்ளக் கிளர்ச்சியுடன்,

"இன்னம் பலபலயோனியி லெய்தாநெறி பெறவே
முன்னம் பலர்அடிதேடவும் முடிதேடவு மெட்டா
அன்னம் பலபயில்வார் புனல்அணி தில்லையுளாடும்
பொன்னம்பல நாதன்கழல் பொற்போடு பணிந்தான்"

என்றுங்கூறுகின்றார். இச் செய்யுளிற் காணப்படும் ஆழ்வாரது பத்திச் சுவையைக் கற்றோர் நோக்கிக்களிப் பெய்துவாராக! இதனால் சிவபெருமான்மீது ஆழ்வார் கொண்டுள்ள பேரன்பு தெள்ளிதின் புலனாம்.

இராசசூயச் சருக்கத்து கிருட்டிணபகவான் தருமர் முதலானோர் நாரதனைத் தரிசிக்குங் காலத்து,

"மான்புரிந்த திருக்கரத்து மதியிருந்த நதிவேணி மங்கைபாகன்
தான்புரிந்த திருக்கூத்துக் கிசையமகிழ்ந் திசைபாடுந் தத்துவஞானி"

என்று அரனது புகழும், அவரது பெருமையும், அவர்தத்துவஞானம் வாய்த்தவர் என்பதையும் நன்கு விளக்கி ஆழ்வார் பாடினமை காண்க. தவநிலைச் சருக்கத்து,

"புள்ளுடைக் கொடியோர் இருவருங்காணாப் புண்ணியன் பொருப்பிடைத்தவஞ்செய்" என்ற இடத்து இவ்விருவரும் அவரைக்காணுதற் குரிய ஆற்றல் வாய்ந்தவரல்லர் என்பதும், இவர்கட்குத்தலைமை யெய்

தியவர் சிவபெருமானே என்பதும் தோன்றக்கூறி இருத்தல் வெள்ளிடை மலையாம்.

“கற்றவர் வளைத்துத் திரிபுரமெரித்தோன் கற்றவர்க் கருத்தினால் காண்போன்” என்ற இக்கூற்று செயற்கரியசெயலை எல்லார்க்குந் தலைவரான ஒருவரே செய்துமுடிக்க வல்லவரென்பதை வலியுறுத்துகின்றது. அன்றியும், கற்றவர்கட்குச் சிவபெருமான் அங்கைநெல்லிக்கனிபோல் தோன்றுபவர் என்பதும் இதனது உள்ளுறையாம். இவற்றால் எவ்வகையினும் மேம்பாடுடையவர் மதியணிகடவுளே எனல் அவரது உள்ளக் கிடக்கை என்பது தெளிவாம்.

“ஓரேனந்தனைத் தேடஒளித்தருளும் இருபாதத் தொருவனந்தப்
போரேனந்தனைத் தேடிப்புறப் பட்டான்” என்ற பாடலில் அவ்

வேனம் தேடியும் தேடமுடியாமையை உணர்த்தலால், சிவபெருமானுக்குப் பரத்துவமும், தேடினோர்க்கு அஃதின்மையும் பெறப்படுதல் காண்க. இருபாதத்து ஒருவன் என்றது வியந்து கூறியதாகும். அவ்வியப்பு அவருக்கு அரனார் மீதுஉள்ள அன்பினது எழுச்சியை விரித்துக்காட்டுவதேயாம். மேலே குறித்தகவியில்,

“கற்றவர் கருத்தினால் காண்போன்” என்றதனால, கல்லாரால் அறியப் படுபவர் சிவபெருமான் அல்லர் என்பதும் பெறப்படுகின்றது. ஓரேனம் என்றுமிகுத்துக் கூறும்பாடலில், ‘ஒளித்தருளும்’ என்கிறார். அவ்விரு மொழியில் ஒன்று அஞ்ஞானத்தை உடையோர்க்கு ஒளித்துவிடுவர் என்பதையும், மற்றொன்று அஃதழிந்து விளங்கினோர்க்கு அக்கணமே வேண்டிய வற்றை அருளுவர் என்பதையும் அவை, தனித்தனியே விளக்குகின்றன.

அன்றியும் அகச்சான்றாக “போரேனந்தனைத் தேடிப்புறப் பட்டான்” என்றது, அருச்சுனன் தவத்தில் மிகுந்தவன் என்பதையும், அவன் தம்மை அடிமுதல் முடிவரைக் காணத்தக்கவன் என்பதையும், உலகினருக்குத் தெரிவிக்கும் பொருட்டுச் சிவபெருமான் இவ்வாறு தேடிக்கொண்டு புறப் பட்டார் என்று விளக்கும் தன்மையது. இப்பாட்டினால் அருச்சுனன் பிரம விட்டுணுக்களினும் மேம்பட்ட தவ உணர்ச்சியை உடையோன் என்பது வெளியாகின்றது

இதுகாறுங்கூறிய வாற்றால் பாயிரத்தில் ‘இடை இடை’என்று கூறிய அடுக்குத்தொடர் சிவபெருமானை அன்றிவேறொருவரையும் குறித்திடாது என்பதை அறிக. ஒரு சொல் பல பொருளைத் தருவதினால் பொருளைநோக்கிக்கொண்டே சென்றால் வழிபலவாகிவிடும். அவ்வாறன்றி உரியகாரணத்தோடு ஆலோசித்தார்க்கு உண்மைப் பொருளிலேயே உள்ளம் நிலைபெறும். ஆழ்வார் சிவபெருமான்மீது கொண்டுள்ள அன்பை முழுதும் புலப்படுத்த இந்நூல் இடந்தரவில்லை. ஏனெனில், கிருஷ்ணார்ச்சுனர்களின் யுத்த முதலியவைகளைக் கூறவேண்டியதே இன்றியமையாத தாயிருக்கிறது. ஆகையால் இடை இடையே தக்கஇடங்களில் வைத்துப்பாடி வந்தாரென்பது நன்கு துணியப்படும்.

(தொடரும்)

உ

தமிழ் மொழியும் சிவநெறியும்.

(தமிழ்மறை வரலாறு)

(கோவிற்பட்டி, தமிழ்ப் பிரமசூத்திராசிரியர், உயர்திரு,
சுவாமி, விருதை, சிவஞானயோகிகள்.)

ஆங்கில நூலாசிரியரிற் பெரும்பாலார் இந்து மகாசமுத்திரத்தினுள் முழுகியிருக்கும் பூமியில் (Submerged Land Lemuria) தான் முதற்கண் மக்கட் பகுப்பார் தோன்றினரென்று கூறுகின்றனர். அதற்கேற்ப மக்கள் முதற்கண் ஒலிக்கக் கூடிய இயல் ஒலிகளே தமிழ் மொழியிலிருக்கின்றன. முன்னர் வடக் கட்குமரி யாற்றுக்கும் தெற்கெல்லையாகிய பஃறுளியாற்றுக்கும் இடையே கிழமேல் நீண்டு கிடந்த 7000 மைற்பரப்புள்ள நிலம் தமிழகம் என்னப்பட்டிருந்தது. அதில் தென் பகுதியில் தென் மதுரையிருந்தது. அதில் தலைச் சங்கம் கி. மு. 9990முதல் 5550-வரையும், இடைச் சங்கம் கி. மு. 5550 முதல் 1850 வரையும் கடைச் சங்கம் கி. மு. 1850 முதல் கி. பி. 10-வரையும் இருந்ததாய்க் குறிக்கப்படுகின்றன. கி. பி. 90-வரை இருந்ததாய்க் குறிப்பாருமுளர்.

மக்கள் தோன்றிய காலமுதற் றோன்றி வளர்ந்து நிலைபெற்றிருந்த தமிழ் மிகச் சீர்தேற்ற மடைந்த தலைச்சங்க காலத்தில் அகத்தியர் தம்பெயரால் ஒரு பேரிலக்கண நூலியற்றினர். அக்கருத்தைக் கம்பராமாயணம் அகத்தியப்படலம் "என்றுமுள தென்றமிழியம்பி யிசை கொண்டான்" என்ற கவி விளக்குகின்றது. ஆகவே இற்றைக்கு 11900 ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மிகச் சீர் தேற்ற மடைந்திருந்ததாய்ப் புலப்படுகின்றது. டாக்டர் ஆப்பர்ட் (Dr. Oppert) புரோபசர் இ. எச். சேஸ் (Prof. E. H. Sayce) முதலிய ஆங்கில சரித்திராசிரியர் சின்ன ஆசியாவில் (Asia Minor) எருதூர் (Ur of Erudu) ஆட்சி கி. மு. 8000 ஆண்டுகட்கு நெடுநாள் முன்னிருந்ததாயும், பின்னர் சாலடியூர் அல்லது சாலடியரூர் (Ur of chaladea) ஆட்சி யிருந்ததாயும், அதன் பின் அங்காடியர் (Accadians) பாபிலோனியர் (Babylonians) ஆட்சிகள் இருந்ததாயும் கூறுகின்றனர். எருதூர் சாலடியூர் என்ற பெயர்கள் தமிழா யிருத்தலானும், சாலடியர் அங்காடியர் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் மிகக் கலந்திருப்பதாலும் இன்னும் பற்பல ஆதாரவுகளாலும் 10000 ஆண்டுகட்குமுன்னரே தமிழ் மொழி மெசபட்டோமியா என்ற சின்ன ஆசியாவிலும் பரவியிருந்ததாய் உறுதிப்படுகின்றது.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் தமிழ்மொழியின் வரலாற்றில் 8000 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டைப் பற்றி யெழுதியிருக்கின்றனர்.

வடமொழி வான்மீக ராமாயணத்தில் சீதையைப் பார்க்க அனுப்பப்பட்ட அனுமாருக்குத் தெற்கிலுள்ள பாண்டியன் ஆண்டிருந்த கவாடபுரத்தைப்பற்றிக்கூறப்பட்டிருத்தலாலும் அக்காலத்திலிருந்த ஜமதக்கினி முனிவருக்குப் பரசுராமர், திரணதூமாக்கினி என்ற தொல்காப்பியர் தொல்காப்பிய மென்ற இலக்கண நூலியற்றினர் என்றும் பல சரித்திரங்கள் கூறலானும், இடைச் சங்கத்தின் பிற் பகுதியில் தொல்காப்பியர் இருந்ததாய்ப் புலப்படுகின்றது. ஜமதக்கினி முனிவர் காலத்தை வேத காலம் (Vedic Era) என்ற ஆங்கில நூல் இற்றைக்கு 3558 ஆண்டு என்றும் வேறு சிலர் 4000 என்றும் கூறுகின்றனர்.

வைவசுத மனு காலத்தில் ஒரு பிரளய மூண்டானதாயும் அவர் இட்ட தெய்வம் மீன்வடிவாய்வந்து கூறியபடி கப்பலில் ஏறியிருந்து நீர்ப் பெருக்குக் குறைந்த பின்பு இறங்கி வைகையாற்றின் கரையில் புதுநகர் இயற்றி ஆண்டதாயும், அவன் திராவிட அரசனென்றும், சுக்லயஜுர் வேதத்தில் சதபதப்பிரமணம் அதன் உபப்பிரமணங்களாகிய பாரதம் பாகவதம் லிங்க புராணம் முதலியவற்றால் வெளிப்படுகின்றது. அது இடைச்சங்க மிருந்த கவாடபுரம் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த மீனக் கொடியுடைய முடத்திருமாறன் கடைச் சங்கமிருந்த மதுரை கண்ட சரித்திர மென்று கருதத்தக்கதாகின்றது. தலைச் சங்க இடைச்சங்கச் செய்திகள் இறையனார் அகப்பொருளுரை சிலப்பதிகார வுரைகளிற் கூறப்பட்டுள்ளன. மேற் கூறிப் போந்தவற்றால் 12000 ஆண்டுகளாய்த் தமிழ் நாடு சீர்தேற்ற மடைந்திருந்ததாகத் தீர்மானப்படுகிறது.

தலைச் சங்கத்தில் மக்கட் குறுதி பயக்கும் நூல்களைத் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும், குன்ற மெறிந்த முருகவேளும், அவர் மாணாக்கராகிய அகத்தியனார், கௌதமனார், வான்மீகனார், மார்க்கண்டனார் முதலிய சங்கப் புலவர்களும் இயற்றியருளினர். அவை இருக்கு யசுர் சாமம் போன்ற தலையாய வோத்துக்கள் எனத் தொல்காப்பியம் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். முதலூழியில் தலைச் சங்க மிருந்த தென் மதுரை கடல் கொள்ளப்பட்டமையால் இப்பொழுது முதற்சங்க நூற்களிற் சில சூத்திரங்களும் பாக்களும் ஆங்காங்கு உரைகளிற் காணப்படுகின்றன. முற்காலத்து ஐந்திணை மாக்களும் அவ்வத்திணைக் குரிய புத்தேள் களின் வணக்கமும் அனைவர்க்கும் பொதுவாம் சிவ வணக்கமும் இருந்து வந்தன. முற்காலத் திருவிடருள் சாதி வேற்றுமை

இருக்கவில்லை. ஆனால் ஒப்பு அரும்பொருள்வினை யாழோர்கூட்டம் என மூன்று வேட்டல்களிருந்தன.

1. ஒப்பு—பெண்கோடற்குலத்தான் வேண்டக் கொடுத்தல்.

2. அரும் பொருள்வினை—தலைவன் வல்லமை தெரிந்து எல்லவருமறியத் தலைவி விரும்பி மாலையிடல். (இதுவே சுவயம்வரம்)

3. யாழோர் கூட்டம்—தலைவன் தலைவி இருவர் ஒத்தார் தாமே கூடுங் கூட்டம். (இதுவே காந்தர்வமணம்)

பிராமணாதி நான்குவருணங்களும் ஆரிட முதலிய மணங்களும் அக்கருத்துக்களைக் கபிலரகவல் "நாற்குலச் சாதியிந் நாட்டினீர் நாட்டினீர்" தொல்காப்பியம் "பொய்யும் பிசியும் புகுந்த பின்றை, யையர் வகுத்தனர் ஆரிட மென்ப" என்ற மேற்கோள்களுணர்த்தி நிற்கின்றன. வடமொழி ஆகமங்களில் சைவ மறையோர்க்கு முன்னோராகிய அகத்தியர் கௌதமர் கௌசிகர் காசிபர் பரத்துவாசர் ஐவர்க்கும் சிவனார் சதாசிவ மூர்த்தமாய் இருந்து சிவாகமங்களை உரைத்தனர்.

அவர் உலகுக் குரைத்தனர் என்று கூறப்படுவதையும் முதற் சங்கத்தில் சிவன் அகத்தியர் முதலியர்பால் தமிழ்த்தலையாய வோத்துக்கள் தோன்றின வென்பதையும் திருமந்திரம் "சதாசிவந்தத்துவம் முத்தமிழ் வேதம்" என்று கூறினமையும் வடமொழி யாகமங்கள் பூஜா காலங்களில் திருவிடகானஞ் செய்யத்தக்கது; விழாக் காலத்தில் திக்குப்பலியில் தமிழ்ப் பண்கள் ஓதத் தக்கன. என்று கூறப்படுவதையும் கருதி நோக்கில் தமிழ் மறைகள் (ஆகமங்கள்) முதற் சங்க காலமிருந்து பண்களோடு ஓதப்பெற்று வந்தனவென்று நன்கு விளங்கும். தமிழ்மறை நீண்டகாலமாயுள்ளது. தமிழ்நாட்டில் நுட்பமான மனவிரிவும் தத்துவநூல்களும் சிவஞானமும் என்றுமுள்ளன. சிவக் கடவுள் உலகனைத்துக்கும் பொதுவாந் தெய்வமேயாயினும் அவனை அறியுநெறியும் அவன் வணக்கமும் தமிழகத்தும் ஏனைத் தமிழ் நாட்டினுமே தொன்று தொட்டுண்மையால் சிவன் "தென்னாடுடையன்" "பாண்டி நாடே பழம்பதியாக வும் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றன. ஆதலால் சிவநெறி என்னப்படும் சுத்தாத்வைத சைவ சித்தாந்தம் தமிழ் நாட்டுக்கும் அதில் வழங்கும் தமிழ் மொழிக்குமே தொன்று தொட்டுரியது. இப்பொழுது அது தமிழினின்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் படுவது போல முற்காலத்தில் பிறமொழிகளி லெழுதப்பட்டதன்றி அம்மொழிகளிலே தோன்றியதன்று. இக்கருத்துக்களை உமாபதி சிவாசாரியார் திருமுறை கண்ட புராணத்தில் "அருமறையைச் சிச்சிலி பண்டருந்தத்தேடு மதுபோலன்றிதுவென்று முன்னதாம்" இது-தமிழ்மறை கம்பநாட்டாழ்வார்இராமாயண அகத்தியபடலத்தில்,

உழக்குமறை நாவினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மரபி னுடி
நிழற்பொலி கணிச்சியணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்.

என்று தமிழ் மறையின் தொன்மையும் மேன்மையும் வழியுங்கூறப் பட்டன. திருமந்திரம்: அருளுடைமையின் ஞானம் வருதல் 2

"அவிழு மனமு மாதி யறிவுந்
தமிழ்மண் டலமைந்துந் தத்துவ மாமே"

திருவாசகம் அகவல் 4—165.

"எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

ஷை ஷை 4—164.

"தென்னாடுடைய சிவனே போற்றி"

திருவாசகம் அகவல் 2—90.

"தென்பாண்டி நாட்டானே"

ஷை ஷை 2—118.

"பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியாரைப் பரம் பரத்துய்ப்பவன்"

ஷை திருவம்மானை 8—10.

"தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை"

என்று எல்லாம்வல்ல பரம்பொருளைச் சிவன் என்றபெயரால் வணங்கும் சைவநெறி தோன்றிய பழம்பதி பாண்டிநாடென்றும், அதில் நுட்பமான கருத்துக்களும் தத்துவநூல்களும் தேவதேவன் ஞானமும் உளவென்றும் விளக்கப்பட்டது. இக் கருத்தை டாக்டர் ஜி. யூ. போப்பையர் (Dr. G. U. Pope, M. R. D. D.) அவர்கள் "சைவ சித்தாந்த நூல் திருவிடர் அறிவின் சிறந்த விளைவு" — (The Saiva Siddhanta Philosophy is the chicest product of Dravidian Intellect) என்று கூறி வற்புறுத்தினர்.

சிவன் என்ற சொல்லுக்குத் தமிழ்ப்பகுதி கூறில் வளர் என்ற பகுதி அத்தன்மையைக் குறிக்குங்கால் வளம் என்றும் அதை யுடையானைக் குறிக்கும்பொழுது வளன் என்றும் ஆவது போலச் சிவன் என்ற பகுதி—பொருந்து என்ற பொருளுடைமையால் எங்கும் பொருந்தி யிருத்தல் - (வியாபித்திருத்தல்) தன்மை சிவம் எனப்படுகின்றது. எங்கும் பொருந்தி யிருப்பான் (சருவ வியாபக னாகிய பரமாத்மா) சிவன் என்று கூறப்படுகின்றனன்.

சுவேதாசுவதரம் 3—11 (சர்வகதஸ்ஸிவக:) "எங்கும் அடைந் துள்ளவன் சிவன்" திருவாசகம் அகவல் 3—28 "அனைத்தனைத் தவ்வயினடைந்தோன்"

உ

தமிழ்ப்பாஷை.

(கண்டாச்சிபுரம், உயர்தர ஆண்பாடசாலைத் தலைமையாசிரியர்
திரு, S. V. கோதண்டராம ஐயர் அவர்கள்)

"தமிழ்" என்பது ஒரு பாஷை. இதை திரமிடம், திரவிடம், திராமிடம், திராவிடம், திரமிளம், தென்மொழி என்றும் கூறலாம். இது "குணகடல்குமரிகுடகம்வேங்கடம்" என்றும், "வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ் கூறுநல்லுலகம்" என்றும் முன்னோர்களால்வரையறுத்துக்கூறப்படும் எல்லையினடங்கியது. ஆயினும் தற்போது இவ்விந்தியர் முழுவதுமே பரவியுள்ளதெனலாம். இதுவே எல்லாப்பாஷைகளிலும் தலைசிறந்து தொன்றுதொட்டுவழங்கிவருவதாகும் இப்பாஷையினது அருமை பெருமையாதி இன்பங்களை நுகர்ந்த பெரியோர்கள் இதற்குத் தண்டமிழ், வண்டமிழ், பூந்தமிழ், பைந்தமிழ், நற்றமிழ், நறுந்தமிழ், செந்தமிழ், கருந்தமிழ், அருந்தமிழ், இன்றமிழ், தென்றமிழ்எனவாதிய சீரியசிறப்புப் பெயர்களிட்டிருக்கின்றனர். "தமிழ்" என்னும் சொல்லுக்கு "இனிமை" என்று பொருள். இனிமை என்றால் தேன், பால், சீனி, கண்டு முதலிய இனிய வஸ்துக்கள் சேர்ந்திருக்கின்றனவா? எனலாம். இத்தமிழ்ச் சுவையறிந்தோர் சீனியாதிய இனியவஸ்துக்களின் சுவையை விரும்பார். சீனிமுதலிய தித்திப்பைத்தரும் வஸ்துக்கள் நாவிற்கு மட்டும் இன்பம் பயக்கும். தமிழ்ச் சுவையோ மனம், கண், செவி, வாய், நா, முதலிய எல்லா உறுப்புக்களுக்குமே இன்பம் பயக்குகின்றது. இதனை,

> "....................... ....நற்கருப்பஞ்சாற்றினிலே
> தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
> னூன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்பதாலும்,

> "................தமிழ் வரைந்த வேட்டைப்
> பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும் பரிந்தவ்
> வேட்டைத் தொட்டாலுங் கைமணக்குஞ்
> சொன்னாலும் வாய்மணக்குந் தூய்ய சேற்றில்
> நட்டாலுந் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே"

என்பதாலும்,

> "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
> நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
> துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
> சங்கத் தமிழ் மூன்றுந்தா"

என ஔவையார் பால், தேன், பாகு, பருப்பு ஆகிய நான்கு இனிய வஸ்துக்களை ஈந்து இதனினுஞ்சிறந்த முத்தமிழ் இன்பத்தை

விரும்பினதாலும் அறியலாம். இப்பாஷையானது "பழையன கழிதலும், புதியன புகுதலும்" என்றபடி காலக்கிரமத்தில் கூடவுங் குறையவும் இல்லை. தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய இதரபாஷைகளுக்கு ஆரிய மொழியின் உதவியின்றி வழங்கமுடியாதிருக்க, தமிழ்மொழியானது ஆரியபாஷையின் உதவியின்றி வழங்கக்கூடியதாயும் எப்பாஷைகளிலும் இல்லாத 'ழ' என்னும் எழுத்தையுடையதாயும் இருக்கின்றது. தமிழ்ப்பாஷையானது முக்கண்மூர்த்தியாகிய சிவபெருமானே கும்பமுனிவராகிய அகஸ்தியருக்கு அருளிச்செய்தனர் என்றால் இதன் பெருமையை யாரால் கூறமுடியும்,

"வடமொழியைப் பாணினுக்கு வகுத்தருளி அதற்கிணையாத், தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்எனில், கடல்வரைப்பிலிதன் பெருமையாவரே கணித்தறிவார்."

இனி, இத்தமிழ்மொழிக்குத்தெய்வீகமும் உண்டெனக்கூறலாம்.

"தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும்முதலை
யுண்டபாலனை யழைத்ததும் எலும்பு பெண்ணுருவாய்க்
கண்டதும் மறைக் கதவினைத்திறந் ததுங்கன்னித்
தண்டமிழ்ச் சொலோமறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்றபடி, சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்காக சிவபெருமான் பரவை வாயிலுக்குத் தூதுசென்றதும் வெகுகாலத்திற்குமுன் முதலை விழுங்கிய மதலையை வருவித்ததும், சம்பந்த சுவாமிகள் எலும்பைப் பெண்ணுருவாக்கியதும், திருமறைக்காட்டில் வேதங்களால் மூடப்பட்டிருந்த கதவைத் திறக்கச் செய்ததும், இத் தமிழ் மொழியின் தெய்வீகத் தன்மையை நன்கு விளக்குகின்றன.

இத்தகு சிறப்பினை வாய்ந்த தமிழ் மொழியை வளர்க்க முற்காலத்தில் மூன்று சங்கங்கள் இருந்தன. இம் மூன்று சங்கங்களில் முதல் இரண்டு சங்கங்கள் இருந்த காலத்தைவரையறுக்க இயலா எனினும் அவை இருந்தனவென்பதற்கு சந்தேகமே கிடையாது. இவ்விரு சங்கங்களும் முறையே தென்மதுரை, கபாடபுரம் என்ற நகரங்களில் இருந்ததாகத் தெரிகிறது. இந் நகரங்கள் கடல் பொங்கி நிலத்தை விழுங்கிய காரணத்தால் கன்னிக் கடலில் ஒளித்தவைகளாம். அக்காலத்தில் தமிழாராய்ந்தவர்கள் அகத்தியர், தொல்காப்பியர், முரஞ்சியூர்முடிநாகராயர், பனம்பாரனார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார், காரிகிழார் முதலிய புலமையோர்களாம். இவர்களுள் தொல்காப்பியர் இயற்றிய 'தொல்காப்பியம்' என்னும் இலக்கண நூல்மட்டும் முழுதும் தற்போதுள்ளது. ஏனையோர் இயற்றியவைகளில் சிற்சிலவேயுள்ளன. இக்காலத்து அரசர்கள் நிலந்தருதிருவிற் பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு

வழுதி, ஆழிவடிவம் பலம்ப நின்ற பாண்டியன், சேரமான் பெருஞ் சோற்றுதியன், சோழாதன் முதலியவர்கள். இத்தமிழையும் இரண்டு சங்கங்களையும் ஆதரித்ததாகக் கூறுகின்றனர். மூன்றும் சங்கமாகிய கடைச்சங்கம் இற்றைக்கு இரண்டாயிரத்து இருநூறு வருடங்களுக்குமுன் (அதாவது கி. மு. இரண்டாம் நூற்றாண்டில்) மதுரையில் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையர னாரும், பெருங் குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரை யாசிரியர் நல்லந்துவனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரரும், ஆகிய பல புலவர் பெருமக்களால் நிறுவப்பெற்று தமிழ் வளர்ந்து வந்தது. அவர்களால் பாடப்பட்ட நூல்கள் நெடுந்தொகை நானூறும், குறுந் தொகை நானூறும், நற்றிணை நானூறும், ஐங்குறுநூறும், பதிற் றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத் தும், வரியும், பேரிசையும், சிற்றிசையும் என்ற இத்தொடக்கத்தன வாகும். இச்சங்கப் புலவர்களுள் பெண்பாலார்களும் உளர். இச் சங்க காலத்தில் தமிழ் மொழியை மூன்று பிரிவுகளாகப் பகுத்துள் ளனர். அதாவது இயல், இசை, நாடகம் என்பனவாம். இவை களுக்கு ''முத்தமிழ்'' என்பது பொதுப்பெயராகும். (முத்தமிழ் - மூன்று தமிழ்) முத்தமிழ் - உண்டென்பதை ''முத்தமிழுடைவினை முற்படுகிரிதனில்முற் படவெழுதியமுதல்வோனே'' என்னும்அருண கிரியார்திருவாக்காலும், ''சங்கத்தமிழ்மூன்றுந்தா'' என்னும்தமிழ்ப் பேரன்னையாகிய ஔவையார் திருமொழியாலும், ஆளுடையபிள்ளை யாராகிய திருஞானசம்பந்தருக்கு ''முத்தமிழ்விரகர்'' என்றசிறப்புப் பெயர் ஏற்பட்டிருப்பதாலும் அறியக்கிடக்கின்றது.

இயற்றமிழ்:—இத்தமிழுக்கு வழக்கத்தமிழ்என்றும் செந்தமிழ் என்றும் சொல்லுவதுண்டு. இது எல்லாராலும் பேசப்படுவதும், எழுதப்படுவதுமாகும். இத்தமிழ்தான் இக்காலத்தில் எங்கும் பரவி இருக்கிறது. இத்தமிழின் விளக்கமானது எல்லோருக்கும் எளி தில் புலப்படுவதன்று ஆயினும் கற்றறிந்த மூதறிவுடையோர் சொல்லக் கேட்பின் சிற்றறிவுடையோர்க்கும் விளங்கக்கூடும். இத் தமிழினா லாக்கப்பட்ட நூல்கள் இன்றும் நின்று நிலவுகின்றன.

இசைத்தமிழ்:— இது இயற்றமிழோடு இசை கூட்டிப்பாடுவ தாகும். இதற்கு, இராகம், பண், தாளமாதியன இன்றியமையாதன தாகும். இத் தமிழ் இக்காலத்தில் சிற்சில விடங்களில் மட்டுமே உள்ளன. முற்காலத்தில் நால்வராதிய சிவனடியார்கள் எல்லாம் இத்தமிழைக் கையாண்டுள்ளனர். இதற்கு இலக்கண இலக்கிய வமைப்புகள் முக்கியமானதாகும். இத்தமிழ்ச் சுவையையும் எளி தில் அறியக் கூடியதன்று. அநேக நூல்கள் இத்தமிழினாலும் ஆக் கப்பட்டிருக்கின்றன.

நாடகத்தமிழ்:—நாடகத்தமிழ் என்பது இயல், இசை என்னும் இரு தமிழுடன் அபினயம் (நடித்தல்) கலந்ததாகும். இது முற் காலத்தில் நமது தேசத்தில் மிகச்சீர்பெற்று விளங்கி இருந்தது.

இத்தமிழானது கல்வியறிவில்லாத மக்களும் மிக விரும்பத்தக்கது. சாதாரணமாக இயற்றமிழ்வல்ல ஒருவர் கதாபிரசங்கமோ அல்லது இதர சொற்பொழிவுகளோ நிகழ்த்துகிறார்கள் என்றால் அதற்குக் கற்றறிந்த சிலரே செல்லுகின்றனர். இசைத் தமிழோடு கூடிய சங்கத்திற்கு இயற்றமிழ் வல்லோர் சிலரும், இசைவல்லோர் சிலரும் கூடுவார்கள். நாடகத் தமிழ்வல்ல நடிகர்கள் இன்றிரவு நீடிக்கப்போகிறார்கள் எனின் பாலர் முதல் விருத்தர்வரை பகலெல்லாம் வேலை செய்து மெலிவுற்ற பலரும் தலை வீங்க விறகு முதலிய சுமை தாங்கியவர்களும், பிணியாளர்களும், அங்கயீனர்களும் உட்பட யாவரும் விரும்பிக்கூடுகின்றனர். நாடகத் தமிழ்வல்ல நடிகர்கள் நடத்தப்படும் அரிச்சந்திரன், நளன், ஸ்ரீராமர், சீதை, சகுந்தலை முதலிய புண்ணிய சரித்திரங்களின் கதா நாயக நாயகிகளின் நற்குண நற்செய்கைகளை தத்ரூபமாகக் கண்டு அறிவில்லாத மக்களும் அச்சீரிய ஒழுக்கங்களை மேற்கொள்ளுவர். பொதுவாக மனிதர்கள் உள்ளத்தைக் கவர்ந்து நல்வழிப்படுத்துவது நாடகத் தமிழே. சிலர் இந்நாடகத் தமிழை வெறுக்கின்றனர். இது தவறு. அவர்கள் வெறுப்பதின் காரணம் பழைய நாடகநூல்களும், அவற்றின் இலக்கணநூல்களும் அழிந்துவிட்டபடியாலும் வெட்டவெளியில் நடத்தப்பட்ட நாடகம் நாளடைவில் பணத்தாசையால் கொட்டகைகளுக்குள் ஜனங்களைக் கீழ்நிலையிற் செலுத்தத்தக்கவையான சில கதா நாடகங்களை ஏற்படுத்தி அதை நடிப்பதாலும்தான். மற்ற விதங்களில் நாடகத்தமிழை வெறுப்பது தவறாகும். இந்நாடகத் தமிழானது நம் நாட்டில் சீர்குலைந்து இருக்கின்றது. கல்வியறிவுடையோர் பலரும் முன் வந்து அதைச் சிறப்புச் செய்யின் தமிழின் அருமை பெருமைகளை எளிதிலுணர்ந்து முன்னேற்றமடைவர்; தேசமும் முன்னேற்றமடையும். தாய்ப் பாஷையாகிய முத்தமிழின் வளர்ச்சி ஏற்பட்டாலொழிய தேசமுன்னேற்றமடையா. தற்காலத்தவர் தமிழை வெறுத்து இதர பாஷைகளில் விருப்புற்று வருகின்றனர். இது பெற்று வளர்த்த தாயாரளிக்கும் இன்னமுதை வெறுத்து எங்கிருந்தோ நடுவில் வந்த மனைவி யளிக்கும் சுவையில்லமுதை விரும்புவதையொக்கும். அத்தகையகாலந்தானே இதுவும். கலாசாலையில் பயிலும் மாணவர்களும் தமிழை வெறுக்கிறார்கள். நண்பர்களே! நாம் நமது தாய்ப்பாஷையாகிய "முத்தமிழை" செவ்வனே பயின்றுவருவோமாயின் நாமும் சுகமே வாழலாம். எல்லாவற்றிற்கும் இறைவர் திருவருள் புரிவாராக.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்துசிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே"

உ

கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே!

(கண்டாச்சிபுரம், திரு. அ. முத்தைய பிள்ளை யவர்கள்)

'கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே' என்பது, அதிசீர்பரவும் வாதவூரண்ணல் மலர் வாய்ப் பிறந்த வாசகத்தேன். இத்தேனைச் சுவைக்குஞ் சிற்றுயிர்களாகிய வண்டுகள் மும்மலமயக்க மற்றுத் தெளிவுற்று நன்னிலையினைப் பெறும். வாதவூரரது வாய் மலர்த் தேனின் ஓர் சிறு பகுதியே இத்துணை மகிமையுடைய தெனின் அம்மலர்த் தேனின் முழுமகிமையையும் வகுத்துக் கூறுதல் மிகையே. 'கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே' என்பது, மார்கழி மாதத்திலே விடியற் காலத்திலே நீராடச் செல்லும் சிறுமியர் தங்கள் தோழி ஒருத்தியைத் துயிலுணர்த்துவான் சென்று 'பிரகாசமான முத்துப்போன்ற வெள்ளிய பற்களையுடைய மாதே! இன்னும் நினக்குப்பொழுது புலரவில்லையோ?' எனக் கேட்க, அவள் 'அழகிய கிஞ்சுகம் போன்ற மொழியினையுடைய நம் சிநேகிகள் அனைவரும் வந்துவிட்டார்களா?' என வினவ, அதற்கு 'வந்திருப்பவர்களை உள்ளபடி கணக்கிட்டுக் கூறுகின்றோம். அதுவரை நீ கண்டுயில் செய்து வீணாகக் காலங் கழிக்காதே' எனக் கூறியதாக நம் மணிவாசகர் கூறிய அருள் வாக்காகும். இவ்வாக்கை நாம் தெற்றத் தெளிந்து உற்று நோக்குவோமாயின் பல நுண்ணிய அரும்பெருங் கருத்துக்கள் ஆழ்ந்து கிடக்கக் காணலாம். அவை நமக்குப் பேரின்பமளிக்கும் பெற்றி யமைந்தனவாகும்.

'நீராடுவான் வரும் எல்லாப் பெண்களும் வந்துவிட்டார்களா?' எனப் படுக்கையிலிருந்தே வினவிய அந்நங்கைக்கு ஏனையோர் 'பெண்ணே நீ அவமே கண்டுயின்று காலத்தை போக்காதே. நீ வினவியவாறு எல்லாரும் வந்து விட்டார்களா? இல்லையா? என வந்தவர்களை எண்ணிக் கொண்டிருந்து காலத்தை வீணாக்க மாட்டோம். நாங்கள் விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப் பொருளைக் கண்ணுக்கினியானைப்பாடிக் கசிந்துள்ளம் உள் நெக்கு நின்றுருகுகின்றோம். ஆகையால் நீயே எழுந்து வந்து அவர்களைக் கணக்கிட்டுக்கொண்டு, கணக்கிற் குறையுமாயின் மீண்டும்போய் துயிலேற்பாயாக.' எனவிடை பகர்ந்தனர் என்பதை:

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
'கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

எனவரும் திருவாசகம் இனிது விளக்குகின்றது.

இத்தனை பேறென் றெண்ணிப்பார்த்துமைக்கு மிச்சிறு பொழுதையும் அவமாகக் கழித்தலாகா தென்பதை நம்அருளுடைய அடிகள் எவ்வளவு நயம்பட வகுத்துக் காட்டியுள்ளனர். என்னே அவர் நம்மீது வைத்த பேரன்பு!

'ஓடுகின்றனன் கதிரவன் அவன்பின் ஓடுகின்றன ஒவ்வொரு நாளாய்வீடுகின்றன' என நம் அருட் பிரகாச வள்ளலாரருளிச் செய்தபடி காலச்சக்கரமானது இடைவிடாது சுழல்கின்றது. சிறிது நேரமுந் தாழ்த்தக் காணேம். 'நீரில் எழுத்தாகும் யாக்கை' என்ப போல் நஞ்சரீரமோ நீர்மேலெழுதிய எழுத்துப்போல் தோன்றி மறையும் இயல்பினது.

"மனிதர்க்கு வயது நூறல் லதில்லை
ஐம்பது இரவில் அகலும் துயிலினால்
ஒட்டிய இளமையில் ஒரைந்து நீங்கும்
ஆக்கை யிளமையில் ஐர்மூன்று நீங்கும்
எழுபது போகநீக் கிருப்பன மூப்பதே

அவற்றுள்,

இன்புறு நாளும் சிலவே அதா அன்று
துன்புறு நாளும் சிலவே"

எனக் கபிலர் கழறியவாறு நூற்றுக்கு எழுபது பங்கு துயிலிலும் இளமையிலும் கழிந்து மீதியிருக்கும் முப்பது பங்கும் இன்பம் சில நாட்களும் துன்பம் சில நாட்களுமாகக் கழிகின்றன.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமை யுடைத்தாகிய" இவ்வுலகின்கண் மனிதர்க்குவயது இவ்வளவென்று

வரையறுக்க வியலா. எப்போதாயினும் கூற்றுவன் வருவான். பொன்னொடும் போகான்; பொருளொடும் போகான்; உற்றோ டொரு வார்த்தை கூறவும் விடான்; வல்லான் வகுத்ததே வாய்க்கா லென அவன் கொண்டதே கோலமாய் நம்மைக்கொண்டுபோய் விடுவான். ஆதலால் காற்றுள்ளபோதே (உயிருள்ள போதே) நம் வினைகளைத் தூற்றுதல் வேண்டும். 'நாளை நாளை என்பீராகில் நமனுடை முறை நாளாவது மறியீர், நம்முடை முறைநாளாவது மறியீர்' எனக் கபிலர் நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து சாற்றி யுள்ளனர். ஆதலின், நாம் அன்றறிவாம் என்னாது அறஞ்செய்து, 'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச் சூழ்த்த மாமலர் தூவித்' துதித்தல்வேண்டும். அதுவே, நமக்குப் பொன்றுங்கால் பொன்றாத் துணையாகும்.

பகுத்தறிவைப் பெறாத பறவைகள் மிருகங்களும் தங்கள் காலத்தை வீணாக்காமல் பலன் கருதி முயற்சியிலீடுபடுவதைக் காண்கின்றோம். காகமானது காலையில் சிறிதுத்தாமதியாது எழுந்து 'கா' 'கா' எனக் கரைகிறது. அதைக் கவனித்தால் 'கடவுளே! நான் எனது தீவினைப்பயனால் இப்பிறவியில் வந்து இடர்ப்படுகின் றேன். எனது துன்பத்தை நீக்கிக் காப்பாற்றுவாயாக' என்பது போல் காணப்படும். அதிகாலை விழித்தெழும் பறவைகளுள் சேவ லின் குரலே மனிதர்களுக்குக் காலை நேரத்தைக் காட்டுவதாகும். அக்குரலாகிய 'கொக்கறுகோ' என்பதும் (கொக்கு மாமரம்) மாமர மாகி நின்ற சூரனை யறுத்து வானவர்க்குதவிய தலைவனே!' எனக் கடவுளை விளித்துப் போற்றுதல் போல் காண்கின்றது. அன்றியும், சிவனடியார்களாகிய நம் பண்டைப் பெரியோர்கள் கிளி, குயில், நாரை முதலிய பறவைகளைப் பார்த்து, 'எங்கள் குறைகளை இறைவ னுக்கெடுத்துக் கூறி அவரை எங்கள் முன் வரும்படி செய்வீர்களாக எனத் தூது பேசியிருப்பதால் அப்பறவைகளினிடத்துள்ள பக்தி யும் பெருமையும் சொல்லாமலே விளங்கும். இத்தகைய தூதுச் செய்யுட்களை நாம் நந்தமிழ் நூல்களில் பலவிடங்களிலும் காணக் கிடக்கின்றது. திருவாலவாயிலே ஸ்ரீ சோமசுந்தரப் பெருமானை யத்திலே வழிபட்டு நாரை முத்தியடைந்தும் கரிக்குருவி உபதேசம் பெற்று வலிமை பெற்றும் இருக்கின்றன. சிலந்தி, பாம்பு, யானை யாகிய இம்மூன்றும் சிவலிங்கப் பெருமானை வழிபட்டு முத்தி

யடைந்திருக்கின்றன. இதன் ஞாபகார்த்தமாகவே சீ, காளம், அத்தி யென்னும் இம்மூன்றுயிர்களின் பெயர்களைக் கொண்டு அத்தலத்திற்கு 'சீகாளத்தி' எனப் பெயரிட்டுள்ளனர் பெரியோர். சிவலிங்கத்தின்மீது வில்வ முதிர்த்த தன்மையினாலே ஓர் 'மூசுக்கலை' மூவுலகமும் புகழும் அரிய பேற்றைப் பெற்றிருக்கின்றது

> கதிரவன் கிரணக் கையால் கடவுளைத் தொழுவான்; புட்கள்
> சுதியொடும் ஆடிப்பாடித் துதிசெயும்; தருக்க ளெல்லாம்
> பொதியலர் தூவிப் போற்றும்; பூதம்தம் தொழில்செய் தேத்தும்
> அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்; அகமேநீ வாழ்த்தா தென்னே!

என்ற பெரியார் மொழிப்படி சூரியன், புட்கள், தருக்கள், ஐம்பூதம், கடல் முதலிய வெல்லாம் இறைவனை தத்தம் முறையில் துதி செய்துகொண்டே காலங் கழித்து வருகின்றன. இதனை நாம் உணர்ந்தும் அவமே கண்ணுறங்கிக் காலங்கழிக்கலாகுமா? எத்தொழிலைச் செய்தாலும் எதவத்தைப்பட்டாலும் நமதுமனப்பேய்க் குரங்கை அடக்கி ஓர் நிலைப்படுத்திச் சதா இறைவனைச் சிந்தனை செய்தல் வேண்டும். 'நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லு நமச்சிவாயவே' என்னும் ஆன்றோருரைப்படி நாம் மறந்தாலும் நமச்சிவாயத்தை நம் நா சொல்லும் முறையிற் பழகுதல் வேண்டும். மார்க்கண்டேயர் போல் நாமும் உலையா முயற்சியுடையவர்களாய் காலத்தை வீணாக்காமல் கருத்தன்பாற் பக்தி செய்வோமாயின் ஊழின் வலிசிந்தும் வன்மையைப் பெறலாம்.

ஆகவே, நாம் இம்மைப் புகழெய்த வேண்டுமாயின், இறைவனோடிரண்டறக் கலக்கும் பேரின்பம்பெறவேண்டுமாயின், பவத்தை நீக்கிச் சிவத்தைக் காணவேண்டுமாயின், கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காமல், துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும் நெஞ்சகம் நைந்து நாடொறும் அஞ்செழுத்தை நினைப்போமாக!

> ஓடுகின்றனன் கதிரவ னவன்பின்
> ஓடு கின்றன ஒவ்வொரு நாளாய்
> வீடுகின்றன வென் செய்வோ மினியவ்
> வெய்ய கூற்றுவன் வெகுண்டிடி லென்றே
> வாடுகின்றனை யஞ்சலை நெஞ்சே!
> மார்க்கண் டேயர்தம் மாண்பறிந்திலையோ?
> நாடுகின்றவர் நாதன்றன் நாம
> நமச்சி வாயங்காண் நாம்பெறுந்துணையே.

பழந் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்கள்·

(வித்துவான் திரு, மு. வேதநாயகன் அவர்கள்.)

(யுவ புரட்டாதி 'சிவநேசன்' 38-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓரளவு அரசியல் முறையில் பழந்தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களைக் கண்டேம். இனி தொழின் முறையைக் காண்போம். பழந் தமிழ்ப் பெருமக்கள், பற்பல தொழில்களுக்குள்ளும் பயிர்த் தொழிலும் கைத்தொழிலுமே சிறந்த தொழில்கள் என எண்ணினூர்கள். அவற்றுள், பயிர்த் தொழிற்கு இன்றியமையாதனவாய; ஆறு, கால், அணை, வயல், ஏர், உழவு முதலிய யாவும் தாஞனதனித் தமிழ்ச் சொற்களே யென்பதில் எள்ளளவும் ஐயம் இன்று. ஆற்றின் அருகில் அமைந்த ஊர்களே அழகு அமைந்த ஊர்களாகும் என்று பண்டைப் பனுவல்கள் பகர்கின்றன.

> "நீ(று)இல்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபா(ழ்)
> ஆ(று)இல்லா ஊருக்கு அழகுபாழ்—மா(று)இல்லா
> உட(ன்)பிறப்(பு) இல்லா உடம்புபாழ் பாழே
> மடக்கொடி இல்லா மனை"

என்னும் செய்யுளால் ஊர்களுக்குச் சிறந்தன ஆறுகள் என்று அறிகின்றேம். ஆறு என்னும் சொல் அறு என்னும் தாதுவின் அடியாகப் பிறந்ததாகும். அறு என்னும் சொல்லிற்குக் காட்டை ஊடு அறுத்துச் செல்வது, என்பது பொருள். நம்முடைய பழந் தமிழர்கள் சிறந்த ஊர்களைச் சீரிய ஆற்றங்கரையில் அமைத்து இருந்தனர். அழகு சான்ற ஆறுகள் ஓடுகின்ற இடங்களில் தமிழ் நாட்டு மன்னர்களின் தலை நகரங்களை அமைத்து இருந்தனர். பேராற்றங் கரையில் சேரர் தலைநகரம் அமைந்து இருக்கின்றது. சோழர் தலைநகராய உறையூர் வான் பொய்ப்பினும் தான் பொய்யாத வளம் உற்ற காவிரிக் கரையில் கவினுறத் தோன்றுகின்றது. இக் காவிரி ஆற்றை வாயாரப் புகழ்ந்த தமிழ்ப் புலவர்கள் பலராவர். அவர்கள் கூறிய இரண்டொரு கூற்றைச் சான்று காட்டி மேற்செல்வாம்.

> "பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யாதளிக்கும் [புன(ல்)நாட்டு"

சண்டேசுரநாயனர் புராணம் (1)

என்றும்,

> "பூத்த பங்கயப் பொகுட்டின் மே(ல்) பொருகய(ல்) உகளு(ம்)
> காய்த்த செந்நெலின் வேலிசூழ் காவிரி.........

என்று தெய்வப்புலமைசான்ற சேக்கிழார் பெருமானுர்; இன்னும்,

> "வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
> திசை திரிந்து தெற்(கு) ஏகினு(ம்)

த(ன்) பாடிய தளி யுணவி(ல்)
பு(ள்) தேம்பப் புய(ல்) மாறி
வான் பொய்ப் பினு(ம்) தான்பொய்யா
மலைத் தலைய கடற் காவிரி
.................."
பட்டினப்பாலை.

என்று,

"பத்தொ(டு) ஆறு நூ(று) ஆயிரம்" (கலிங - பரணி) பொன் பரிசு பெற்றுப் பட்டினப்பாலையை அளித்துப் பன்னரும் புகழ் கொண்ட உருத்திரங் கண்ணனாரும் கூறிய செய்யுட்கள் சீரிய இன்பத்தை ஊட்டுகின்றன. இனி, தமிழ்க் குழவி பிறந்து, தவழ்ந்து விளையாடிய இடம் என்றுசான்றோர்களால் புகழப்படுகின்ற மாண்பு அமைந்த மதுரைமாநகரம்;

"வையை என்னும் பொய்யாக்குலக்கொடி"

என்று புலவர் நாவால் புகழப்பெற்ற வையைநதிக்கரையில் அமைக்கப்பெற்றுத் திகழ்ந்து விளங்குகின்றது. "ஊரெனப்படுவது உறையூர்" என்னும் சொற்றொடர். ஊர்கள் என்று சொல்லப்படுகின்ற ஊர்கள் பலவற்றுள்ளும் உறையூரே சிறந்த ஊராகக் கருதப்பட்டது என்பதை நன்கு உணர்த்துகின்றது.

ஆற்றை அணைகட்டித் தடுத்து வேளாண்மை செய்தித் தமிழர்கள் தடையின்றி அறிந்து இருந்தனர். வேளாண்மை என்னும் சொல் வெள்ளம் என்னும் தாதுவின் அடியாகத் தோன்றிற்று. ஆங்கிலப் பேராசிரியராய கால்டுவெல் வெள்ளத்தை ஆளுந் தன்மை வெள்ளாண்மை என்று கூறுகின்றார். இச்சொல்லையே வேளாண்மை என்று இலக்கியங்களில் வழங்கக் காண்கின்றோம். பள்ளத்திற் பாயும் வெள்ளத்தைத் தடுத்து அணைகட்டி. கால்வாயின் வழியாக நீரைச் செலுத்தினர். இவ்வாறு கால்வாயின் வழியாகக் கடுகிச் செல்லும் நீரை வயல்களிலும், குளம், ஏரி முதலிய நீர் நிலைகளிலும் பாய்ச்சி அளவற்ற பயனைப் பண்டைத் தமிழர்கள் பண்புற நுகர்ந்து வந்தனர். குளம், ஏரி, ஊருணி என்னும் சொற்கள் சிறந்த தமிழ்ச் சொற்களேயாகும். பழந் தமிழ்ப் பனுவல்களால், அரசர்கள் குளந் தொட்டு, (தொட்டு-தோண்டுதல் வெட்டி) வளம் பெருக்கினார்கள் என்பதை, எளிதில் உணர்கின்றோம்.

"....................
காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம் பெருக்கி
.................."

என்பது பட்டினப்பாலை. தமிழர்கள் வெள்ளாண்மையைச் செய்வதற்குக் கைக்கொண்ட கருவிகள் யாவும் சிறந்த தமிழ்ப்பெயர்களை ஏற்றுத் திகழ்கின்றன. உழுதுண்டு வாழும் வாழ்வே தலை சிறந்த ஒப்புயர்வற்ற வாழ்வென்றும், பிறர்பால் பணிந்து அவர் ஏவுவன செய்து வாழும் வாழ்வு, பழுதுற்ற இழிவான வாழ்வென்றும், பழந்தமிழர்கள் கருதிவந்தனர் என்பதற்குப் பின்வரும் செய்யுள் சான்றாகும்.

''ஆற்றங் கரையில் மரமு(ம்) அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழு(ம்)அன்றே—ஏற்ற(ம்)
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு''

இன்னும்,

''சீரைத் தேடி(ன்) ஏரைத் தேடு''

என்று நம்மூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியார் அறிவுறுத்திப் போந்துளார். இன்னும், காராளர் வயலில் தங்கள் கையார நட்ட முடி திருந்திற்றன், பாராளுந்திறலுடைய அரசர்களது முடி திருந்தும் என்று உமாபதிசிவம் அருளும் வாக்கு நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது என்றால், வேளாண்மைத் தொழிலே சிறந்த தொழில் என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

''காராள(ர்) அணிவயலி(ல்) உழுது தங்கள்
கையாரநட்ட முடிதிருந்தி(ல்) இந்தப்
பா(ர்)ஆளு(ம்) திற(ல்)அரசர் கவித்த வெற்றிப்
பசும்பொன்மணி முடிதிருந்து(ம்) கலப்பைபூண்ட
ஏரா(ல்)எண் (தி)சைவளர்க்கும் புகழ் வேளாள(ர்)
ஏ(ர்)அடிக்கு(ம்) சிறுகோலா(ல்) தரணிஆளச்
சீராரும் முடியரச(ர்) இருந்து செங்கோல் செலுத்துவர்
வேளாளர் புகழ்செப்ப பலாமோ''

இனி, சுருங்கக் கூறுமிடத்துவேளாண்மையைச் சிறந்ததொழிலாகத் தமிழர்களால் கருதப்பட்டது என்பது அங்கைக்கனியாம். வேளாண்மை என்னும் சொல்லே உபகாரம் என்னும் பொருள் தருமாயின், அத்தொழிலை இயற்றுகின்ற மக்கள் சாலச் சிறந்தவர்கள் என்பதற்கு, இதினும் சிறந்த வேறு உண்மைச் சான்று உண்டாமாறு இல்லையெனக். *

(தொடரும்)

* அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப்பகுதி விரிவுரையாளர் திரு, ஆர். பி. சேதுப்பிள்ளை பீ. ஏ. பீ. எல். அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவி இக்கட்டுரை எழுதப்பட்டது.

மதிப்புரை மஞ்சரி.

ஆற்றூர்ப் புராணம்:— திருவாவடுதுறை யாதீன மகா வித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியது. ஷை பிள்ளையவர்களின் மாணாக்கருள் சிறந்து விளங்கும் திருவாளர், மகாமகோபாத்திய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களால் தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை, கதைச் சுருக்கம் முதலியவற்றோடு, ஆற்றூர் மகா-௱-௱ஸ்ரீ ச. இரத்தினசபாபதி பிள்ளையவர்கள் விருப்பின்படி பதிப்பிக்கப் பெற்றுளது. கடவுள் வாழ்த்துச்செய்யுள் 26 சேர்த்து திருநாட்டுப் படலம்முதல் முனிவர் முதலியோர் பூசித்த படலம்வரை படலம் 14-க்கு 525-செய்யுட்களையுடைய இப்புராணம் சிவமகிமைகளையும் சைவநூற் கருத்துக்களையும் திருத்தலப் பெருமை வரலாறுகளையும் சிறப்பித்து சொல்லணி பொருளணிகளாதியமல்கிபிள்ளையவர்களின் சிவபக்தியையும் பேராற்றலையும் விளக்குகின்றது. இத்திருத்தலம் மாயூரத்திற்கு வடக்கேயுள்ளது க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் மந்தாரம் எனவந்துளது என்பனவாதியவைகளைத் தக்க சான்றுகளுடன்எடுத்துக்காட்டி மிக்க அழகாகமுகவுரையும் எழுதிப் பதிப்பித்த ஐயரவர்கள் இந்நூலாசிரியர் பேரையும் தெய்வச்செந்தமிழையும் விளக்கத் தமிழகம் செய்த தவத்தால் வந்துதித்தவர்களென்பதுமிகையாகா. சைவமணமும் தமிழ்மணமுங்கமழும் இப் புராணத்தை ஒவ்வொரு சைவமக்களும் தமிழ்மக்களும் பெற்றுப் படித்து இன்புறுவார்களாக. விலை அணா 10.

பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும்:— இப்பரிபாடல் கடைச் சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்கள் அருளிய எட்டுத் தொகையுள் ஐந்தாவது; சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து பொருள்களின் இயற்கையழகுகளை நன்குதெரிவிப்பது. இந்நூலின் பகுதிகளை மிகமுயன்று சென்னை மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பலபல இடங்களில் தேடிச் சேகரித்து பொருட் சுருக்கம் விசேடக்குறிப்பு முதலானவைகளும் எழுதி இரண்டாம்பதிப்பாக வெளியிட்டுள்ளார்கள். அரும்பத முதலியவற்றின் அகராதியே ஐம்பத்தாறுபக்கம்ஆக்கியுள்ளார்கள்; பக்கம்ஒன்றுக்குஎண்பதுவீதம்அரும்பதங்கள் காணப்பெறுகின்றனவென்றால் இந்நூலின் பெருமையை கற்றோராலேயே கணித்தறியத்தகும். கற்றோர்க்கும் கற்போர்க்கும் ஏற்ற பெற்றித்தாய இந் நூல் அதற்குரிய அங்கங்களுடன் டிம்மி 1-க்கு 8 உயர்ந்த கிளேஸ் 340 பக்கங்களையுடையதாய் காலிக்கோ கட்டிடத்துடன் அழகுற மிளிர்கின்றது. இதன் விலை ரூபா 2—0—0.

இவ்விரண்டு புத்தகங்களும் 'தியாகராஜவிலாசம்' திருவேட்டீசுவரன்பேட்டை சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

இப்புத்தகங்களை அடியேற்கு அன்பு கூர்ந்தனுப்பிய வையகம் புகழும் உயர்திரு ஐயரவர்கட்கு என்றும் மாறா நன்றியறிதலுடன் மனமார்ந்த வணக்கத்தைச் செய்கின்றேன். (ப—ர்)